


# ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

## ஸ்ரீ ஆச்சார்யாளின் அம்ருத உபதேசங்கள்



எப்பொழுதும் தனக்கு நல்லதே நடக்க வேண்டும்,. நல்லதே கிடைக்க வேண்டும் என்று ' மனிதன் எண்ணுகிறான். அவன் அதுபோல் எண்ணுவது நியாயந்தான், அதற்காக அவன் பல செயல்களையும் செய்துகொண்டிருக்கிறான். அதன் பயன்களையும் ஜன்மஜன்மமாக அனுபவித்துக் கொண்டு வருகிறான் ஞானம் வரும் வரை.

ஆனால் இக்காலத்தில், செயல்களைச் செய்துகொண்டு வரும் தங்களுக்கு பலன் கிடைக்குமா என்று ஒரு சிலருக்கு ஸந்தேஹம் வருகிறது. நிச்சயமாகப் பலன் கிடைக்கும் என்று தான் சாஸ்த்ரம் கூறுகிறது. எந்தச் செயலுக்கும் அதற்கான உண்டு. நல்ல செயல்களுக்கு நல்ல பலனும், கெட்ட செயல்களுக்கு கெட்ட பலனும் உண்டாகும். இதில் ஸந்தேஹமே வேண்டாம். அதனால்தான், மனிதனின் நலனை உத்தேசித்து "நல்ல செயல்களையே செய். உனக்கு இஹக்திலும் பரத்திலும் நல்ல பலனே கிடைக்கும்' என்று சாஸ்திரம் உபதேசிக்கிறது;

यथा धेनुसहस्रेषु वत्सो बिन्दति मातरम् ।
तथा पूर्वकृतं कर्म कर्तारमनुगच्छति ॥

யதா² தே⁴னுஸஹஸ்ரேஷு வத்ஸோ பி³ந்த³தி மாதரம் |
ததா² பூர்வக்ரு’தம்’ கர்ம கர்தாரமனுக³ச்ச²தி ||

அதாவது, ஆயிரம் பசுக்களுக்கு நடுவில் தன் தாய்ப் பசு போய்க் கொண்டிருந்தாலும் கன்றுக்குட்டி தன் அம்மாவைத் தொடர்ந்து போய்க்கொண்டிருக்கும். அதேபோல் ஒருவன் ஏற்கனவே செய்த செயல்கள் அவனைப் பின் தொடர்ந்து கொண்டே இருக்கும். ஆகையால், செயல்களுக்கான பலனும் நிச்சயமாகக் கிடைக்கும்.

कुशलान्याशु सिद्ध्यन्ति नेतराणि कृतानि यत् ।

குஶலான்யாஶு ஸித்³த்⁴யந்தி நேதராணி க்ரு’தானி யத் |

சொல்லப் போனால் புண்யச் செயல்களுக்கு சீக்ரமாகவே பலன் கிடைக்கிறது. கெட்ட செயல்கள் மெதுவாகக் கெட்ட பலனைக் கொடுத்து அந்தச் செயல் செய்தவனை அழிந்துவிடுகிறது. இதை நன்றாகப் புரிந்துகொண்டு நல்ல செயல்களையே செய்ய வேண்டும் என்று கூறி எல்லோரையும் ஆசீர்வதிக்கிறோம்.

(தக்ஷிணாம்னாய சிருங்கேரி ஸ்ரீ சாரதா பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ மஹாசந்நிதானம் ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள்)



# ஷண்மதம் - ஆறு பிரிவுகள்

(புதுக்கோட்டை பூஜ்யஸ்ரீ ப்ரணவாநந்த மஹாஸ்வாமிகள்)

**காணாபத்யம்**



கணபதி உபாசனையை பிரதானமாக சொல்லக்கூடிய சம்பிரதாயத்துக்கு காணாபத்யம் என்று பெயர் என்று பார்த்தோம். கணபதியே முழு முதல் கடவுளாக ஆதிபூஜ்யனாக விளங்கக் கூடியது என்பது இன்றளவும் எல்லா சம்பிரதாயங்களிலும் கண்கூடாக இருப்பதையும் பார்க்கிறோம். பொதுவில் மகாவிஷ்ணுவுடைய அவதாரங்கள் தசாவதாரம் என்று விசேஷமாக சொல்லப்படுகிறது.

மகாவிஷ்ணுவுடைய அவதார சரித்திரங்களும் ஸ்ரீமத் பாகவதம் முதலான புராணங்களில் சொல்லப்பட்டு வருகிறது அதேபோல் மகா கணபதிக்கும் பலவிதமான அவதாரங்கள் உண்டு என்று பார்க்கவ புராணம் முத்கல புராணம் முதலான புராணங்களில் காண்கிறோம். மகாவிஷ்ணு உடைய அவதாரங்களை போல அவ்வளவு பிரபலமாக அறியப்படுவதில்லை என்றாலும் மகாராஷ்டிர தேசத்தில் மகாகணபதி உடைய அவதாரங்களும் அது சம்பந்தமான ஆலயங்களும் இன்றளவும் ப்ரஸித்தமாக இருக்கிறது.

**வக்ரதுண்டர்:** காசியை துராசுரன் என்ற கொடுங்கோல் மன்னன் ஆண்டுவந்தான். அவனை அழிக்க சக்திதேவியை நோக்கி தேவர்கள் தவமிருந்தனர். அதனால் மனமிரங்கிய சக்தி, வக்ரதுண்ட விநாயகரைத் தோற்றுவித்தாள். சிம்ம வாகனத்தில் எழுந்தருளிய வக்ரதுண்டர் துராசுரனை அழித்து அருள்புரிந்தார்.

**சிந்தாமணி கணபதி:** அபிஜித் என்ற அசுரனுக் கும் குணவதிக்கும் இறையருளால் பிறந்த கணன் என்பவன், கபிலரை துன்புறுத்தி அவரிடம் இருந்த சிந்தாமணியைக் கவர்ந்தான். இதனால் வருந்திய கபிலர்



விநாயகரை மனமுருகி வழிபட்டார். அவருக்கு அருள்புரிய திருவுளம் கொண்ட பிள்ளையார், கணனை அழித்து சிந்தாமணியை மீட்டுக் கொடுத்தார்.

**கஜானனர்:** பார்வதி பரமேஸ்வரரிடம் அவதாரம் செய்து கஜமுகாசுரனைக் கொன்ற விநாயகரை கஜானனர் எனப் புராணங்கள் போற்றிப் புகழ்கின்றன.

**விக்ன விநாயகர்:** வரேண்யன் புஷ்பவதி என்ற தம்பதியரிடம் தோன்றி விக்னங்களை அகற்றியவர் விக்ன விநாயகர். இவர், வரேண்யன் என்பவனுக்கு உபதேசித்ததே கணபதி கீதை ஆயிற்று.

**மயூரேச கணபதி:** சங்கடஹர சதுர்த்தி விரதம் கடைப்பிடித்து வழிபட்ட பார்வதிதேவியிடம் அவதரித்து, மயில் வடிவினனான ஸிந்து என்ற அசுரனை அழித்து, அவனையே வாகனமாகக் கொண்டவர் இந்த விநாயகர்



**பாலசந்திரர்:** தேவர்களை அடக்கியாண்ட அநலன் என்ற அசுரனை விநாயகர் விழுங்கி னார். அதனால் உண்டான வெம்மை நீங்க, மிக குளிர்ச்சியான சந்திரனை நெற்றியில் அணிந்து பாலசந்திரர் என்று பெயர் பெற்றார்.

**தூமகேது:** புகை வடிவான அசுரன் ஒருவனை அழிப்பதற்காக அவதரித்தவர் தூமகேது விநாயகர். மாதவன், ஸுமுதா என்ற அரச தம்பதியருக்குப் பிள்ளையாகத் தோன்றி, தூம கேதுவை வதைத்தார் இந்த பிள்ளையார்.

**கணேசர்:** பலி என்னும் அரக்கனைக் கொல்ல கணங்களுக்குத் தலைவனாக வந்து வெற்றி கண்டதால் கணேசர் என்ற திருப்பெயர் பெற்றார் பிள்ளையார்.

**கணபதி:** பார்வதி பரமேஸ்வரர் யானையின் சித்திரத்தைப் பார்த்துக் களிக்கும்போது அவதரித்தவர் கணபதி.

**மகோற்கடர்:** காச்யப முனிவரின் பிரார்த்தனையால், அதிதியிடம் பிறந்தவர் மகோற்கடர். தேவாந்த நாராந்ரர்கள் இவரால் சம்ஹாரம் செய்யப்பட்டனர்.

**துண்டி கணபதி:** துராஸதன் என்ற அரக்கனை அழிக்க, உமையவளின் திருவருளால் அவதரித்தவர் துண்டி கணபதி.
வல்லப கணபதி: மரீசி முனிவரின் மகள் வல்லபையை மணந்து வல்லப கணபதி என்று பெயர் பெற்றார்.
(தொடரும்......)



# தேவி வழிபாடு

(புதுக்கோட்டை பூஜ்யஸ்ரீ ப்ரணவாநந்த மஹாஸ்வாமிகள்)

திதி நித்யா தேவியர் :



தேவி பராசக்தியின் அற்புத லீலைகளை ஆயிரம் திருநாமங்கள் கொண்டு அற்புதமாக விளக்கியிருக்கிறார்கள். அவற்றில், 'ப்ரதிபன் முக்யராகாந்த திதி மண்டல பூஜிதா' என்றும், 'நித்யா பராக்ரமாடோப நீரிக்ஷண ஸமுத்ஸுகா' என்றும் இரு நாமங்கள். அதாவது, பிரதமை முதல் பௌர்ணமி வரையிலான திதி தேவதைகளால் பூஜிக்கப்படுபவள் என்றும், நித்யா தேவதைகளின் பராக்ரமத்தைக் காண்பதில் ஆசையுள்ளவள் என்றும் பொருள்.

(தக்ஷிணாம்னாய சிருங்கேரி ஸ்ரீ சாரதா பீடம், பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ மஹாசந்நிதானம் ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள், 2012 விஜய யாத்திரையின் போது ஸ்ரீ சாரதாம்பாளுக்கு கும்பாவிஷேகம் செய்த போது எடுத்த படம்)

திதி நித்யா தேவியர் யார்? அவர்கள் பராக்ரமம் என்ன? லலிதா பரமேஸ்வரியை ) ஸ்ரீசக்ர ரூபத்தில் வழிபடும் முறை 'ஸ்ரீவித்யை' எனப் போற்றப்படுகிறது. அதில் பிந்துஸ்தானம் எனப்படும் இடத்தில் தேவி காமேஸ்வரனோடு இணைந்து காமேஸ்வரியாக அருட்பாலிக்கிறாள். பிந்துவைச் சுற்றியுள்ள முக்கோணத்தைச் சுற்றி பக்கத்திற்கு ஐந்து நித்யா தேவிகள் வீற்றிருந்து அருள்கின்றனர். இந்த ஸ்ரீவித்யாவின் ப்ரதம தேவதையான 'பராபட்டாரிகா' என வேதங்கள் போற்றும் மஹா நித்யாவானவள், ஸ்ரீசக்ரத்தில் பிந்துஸ்தானத்தில் வீற்றிருக்கின்றாள். அந்த தேவியின் அம்ருத கலைகள், பதினைந்து பாகங்களாகப் பிரிந்து ஒவ்வொரு கலையும் ஒவ்வொரு தேவியாக உருவம் பெற்று பதினைந்து நித்யா தேவிகளாக தேவியைச் சுற்றி கொலுவீற்றுள்ளனர். இவர்கள் அனைவரும் அம்பிகையின் அங்க தேவதைகள்.

(தொடரும்......)



# நவராத்திரி

(புதுக்கோட்டை பூஜ்யஸ்ரீ ப்ரணவாநந்த மஹாஸ்வாமிகள்)



இராஜ சியாமாளவின் தோற்றத்தை காளிதாசர் தன்னுடைய ஸ்யாமளா தண்டகம் என்ற நூலின் தியானத்தில் அழகாக வருணித்துள்ளார்.

சாக்த சமயம் என்பது அம்பிகையின் வடிவங்களை ரதானமாகக்கொண்டு பூஜிப்பது. இதில் அன்னைக்கு நவராத்திரி என்பது மிகவும் விசேஷமாகக் கருதப்படுகிறது.

(தக்ஷிணாம்னாய சிருங்கேரி ஸ்ரீ சாரதா பீடம்,ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ மஹாஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள், ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ ஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ விதுசேகர பாரதீ மஹாஸ்வாமிகள் மற்றும் புதுக்கோட்டை ஸ்ரீ புவனேஸ்வரீ அவதூத வித்யாபீடத்தின் பீடாதிபதி ஸ்ரீ ஓம்காரானந்த மஹாஸ்வாமிகள் (தேனி) ஸத்குரு ஸ்ரீ சாந்தானந்த மஹாசஸ்வாமிகளின் ப்ரதம சிஷ்யரும், புதுக்கோட்டை ஸ்ரீ புவனேஸ்வரீ அவதூத வித்யாபீடத்தின் பீடாதிபதியுமான பூஜ்யஸ்ரீ ப்ரணவாநந்த மஹாஸ்வாமிகள் 2017 புதுக்கோட்டை ஸ்ரீ புவனேஸ்வரீ விஜய யாத்ரா )

ஒவ்வொரு வருடமும் நான்கு நவராத்திரிகள் கொண்டாடப்படுவதை நாம் கண்டோம். தை மாதத்தில் தை மாத அமாவாசை முதல் ஒன்பது நாட்கள் கொண்டாடப்படுவது சியாமளா நவராத்திரி.

(தக்ஷிணாம்னாய சிருங்கேரி ஸ்ரீ சாரதா பீடம்,ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ மஹாஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள், ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ ஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ விதுசேகர பாரதீ மஹாஸ்வாமிகள் மற்றும் புதுக்கோட்டை ஸ்ரீ புவனேஸ்வரீ அவதூத வித்யாபீடத்தின் பீடாதிபதி ஸ்ரீ ஓம்காரானந்த மஹாஸ்வாமிகள் (தேனி) ஸத்குரு ஸ்ரீ சாந்தானந்த மஹாசஸ்வாமிகளின் ப்ரதம சிஷ்யரும், புதுக்கோட்டை ஸ்ரீ புவனேஸ்வரீ அவதூத வித்யாபீடத்தின் பீடாதிபதியுமான பூஜ்யஸ்ரீ ப்ரணவாநந்த மஹாஸ்வாமிகள் 2017 புதுக்கோட்டை ஸ்ரீ புவனேஸ்வரீ விஜய யாத்ரா )

(தொடரும்.....)



# தசமஹா வித்யா

(புதுக்கோட்டை பூஜ்யஸ்ரீ ப்ரணவாநந்த மஹாஸ்வாமிகள்)

**3. திருவருள் புரியும் திரிபுரசுந்தரி** : பொதுவாக ஸ்ரீ வித்யா என்றாலே இவளைத்தான் எண்ணுவர். லலிதை என்றும், ராஜராஜேஸ்வரி என்றும் காமாட்சி என்றும் போற்றப்படுபவள் இவளே.

திரிபுரசுந்தரி என்றால் மூவுலகிலும் அழகி என்பது வெளிப்பொருளாம். நமது ஆசையை அடக்கப் பாசமும், துவேஷத்தை அடக்க அங்குசமும், ஐம்புலன்களைக் கவர ஐந்து மலர்ப்பாணங்களும், மனத்தை இழுக்கக்



கரும்பு வில்லும் கொண்டு விளங்குகின்றாள் திரிபுரசுந்தரி.

இப்போது தசமாக வித்யைகளில் வேறு இருவரான மாதங்கீயும், பகளா முகியும் முறையே இவளுக்கு மந்திரிணியும், சேனாநாயகியும் ஆகிறார்கள்.

இவளே ஐந்தொழில் புரிகிறவள் என்பதால் பிரம்மனும், விஷ்ணுவும் ருத்திரனும், மாயைக்கு அதிபனாம் மகேசுவரனும் இவளது மஞ்சத்தின் நாலு கால்களாகவும் அமரும் பீடமாகவும் ஆகிறார்கள்.

பலன்கள்: சகல ஸௌபாக்கியங்கள்.



**4. பொன்னாக்கும் புவனேஸ்வரி :** காலமாக விரிந்தவள் காளி, இடமாக விரிந்தவள் புவனேஸ்வரி. காலவெள்ளத்தில் புவனவெளிகளைப் பூக்கச் செய்தவள் இவளே.

உடனே புவனங்களை நிரப்ப பசு, பட்சி, மிருகம், பாம்பு, ஆண், பெண், என்று அனைத்து ஜீவராசிகளும் தோன்றிவிட்டனர். அவர்களுக்கு உருவங்களும் பெயர்களும் வந்தது இவளால்தான். அவைகளை ஆளும் புவனேஸ்வரியாக இவள் ஆனாள். இவளையே பிரகிருதி அல்லது இயற்கை எனலாம். இவள் மாயை ஆயினும் நாம் பிரார்த்தித்தால் இவளே மாயை நீக்கி மெஞ்ஞானத்தை நல்குவாள்.

'தேவீ ப்ரணவம்' எனப்படும். 'ஹ்ரீம்' காரத்தை மந்திரமாகக் கொண்டவள் இம் மகாமகாசக்தி.

பலன்கள்: புவனேஸ்வரியின் தரிசனத்தினால் உலகங்களை ஜெயிக்கும் ஆற்றலை சாதகன் அடைகிறான். அளவில்லா செல்வமும், வாழ்க்கை வளமும், பதவி உயர்வும் நிச்சயமாகப் பெறுவான், உலகங்கள் எல்லாம் தன் ஆத்மாவே என்ற சர்வாத்மபாவம் (எங்கும் நானே உள்ளேன் என்கிற நிச்சயம் பெறுகிறான்.

**5. திருப்பங்கள் தரும்திரிபுரபைரவி :** திரிபுர சுந்தரி அன்பின் வடிவம், பைரவம் என்றால் அச்சமூட்டுதல், திரிபுர பைரவி, ஆனால் கோரச் செயல் செய்து அச்சமூட்டவில்லை.

தங்களது மகிமை காரணமாகவே சிலர் தம்மை நாம் அணுகவொட்டாமல் அச்சுறுத்தவில்லையா? அப்படித் தபோசக்தியாலேயே நமக்கு பைரவி ஆனவள்.

மூலாதாரத்தில் இவள் தபோக்கினியானாலும் சிரத்தில் ஸஹஸ்ரார உச்சிக்கு ஆரோகணித்து சுந்தரி ஆகும்போது அமுதமழை வர்ஷிக்கிறாள்.

இவள் ஞானமாவதாக விளங்குகிறாள் எனக்காட்டவே ஜபமாலையும் ஞான முத்திரையும் தாங்கியிருக்கிறாள். அபயம் தந்து வரத முத்திரையும் காட்டுகிறாள். நெற்றியில் ஞானக்கண்ணோடும் இதழ்களில் புன்னகையோடும் காணப்படுகின்றாள்.

ஞானாமுதம் பாய்ச்சுவேன் எனக் காட்டவே அமுதத்தைப் பிறப்பிக்கும் மதியைத் தலையில் சூடியிருக்கிறாள்.

பலன்கள்: ஜாதவேதஸே என்கிற வேத மந்த்ரத்தினால் இத்தேவியை உபாஸித்தால் பீடாபரிஹாரமும், தனலாபமும், சகல சம்பத்தும் ஏற்படும்.



லௌகீக, சாஸ்திரீய, ஞான விருத்தியும் அடையலாம். முக்தியையும் இத்தேவியை வணங்கினால் பெறலாம்.

**6. தியாக தேவி சின்ன மஸ்தா :** காளியின் பயங்கரத்தையும் அற்பமாக்கும் ஒரு கோரம் உண்டெனில் அது சின்னமஸ்தாவே ஆகும்.

தியாக சொரூபமான அவளின்: ஒரு கையில் வெட்டப்பட்ட ஒரு தலை. யாருடைய தலை? சாட்சாத் அவளுடையவரேதான்! அதனால்தான் இவளுக்கு சின்ன மஸ்தா என்றே பெயர். (சின்ன-துண்டித்த; மஸ்தா- தலையினள்) இந்திரியங்கள் போனால் போதாது, அகங்கார மனமும் தொலைய வேண்டும் என்று காட்ட தன் தலையையே கொய்து கொண்டிருக்கும் தியாக ஸ்வரூபி

இவளே. வெட்டிய கழுத்திலிருந்து முன்பு சொன்ன மூன்று நாடிகளினின்று மூன்று குருதி ஊற்றுக்கள் வெளிவருகின்றன. 'வாருணி', 'டாகினி' என்ற இவளது சேடியர் இருவர் இடை பிங்கலையிலிருந்து வரும் குருதியைப் பருகுகின்றனர்.

இவளது வெட்டுண்ட தலையே மத்ய நாடியாம். கழுமுனையின் சக்தியைப் பருகுகிறது. இடி, மின்னல், என்ற அடையாளங்களைக் காட்டி, ஒலி, ஒளி என்ற இரு சக்திகளைத் இறைத் தன்மையிலிருந்து பேதப்படுத்தி வெளிக்கொணர்ந்த மகாசக்தி ஆவாள்.

இந்த ஒலி ஒளிகளோடு ஞானமாகவும் இருக்கிறாள். மீண்டும் மூலத்தில் தோய வேண்டுமாயின் ஜீவ (உயிர்) முடிச்சை வெட்ட வேண்டும். அதனால்தான் இவள் ஒரு கரத்தில் 'கத்ரிக்கோல்' வைத்திருக்கிறாள்.

ஆக இவளது உருவம் கொடுமையாக இருப்பினும் செயலோ மதுரமாக இருக்கிறது. அபயவரதங்களை இவளும் கொண்டுள்ளாள். சின்ன மஸ்தாவின் சின்னாபின்னமான மஸ்தகமே ரேணுகை என்றும், தலையை வெட்டிக்கொண்ட இவளே பரசுராம அவதாரத்தின் மூல சக்தி என்றும் கருதப்படுகிறது. பஞ்ச இந்திரியங்கள், மனம் ஒன்று ஆக இந்த ஆறினை அடக்கும் இவள் 'ஷஷ்டி தேவி' என்றே சிறப்பிக்கப்படுகிறாள்.

பலன்கள்: இந்த தேவியின் க்ருபையால் ஸாதகன் சிவத்தன்மையை அடைவான். புத்ர தனதான்யாதிகளை வெகு சீக்கிரம் அடைவான். அம்பாளின் அனுக்ரஹத்தினாலேயே கவித்வம், பாண்டித்யம் அடைந்து தன்யன் ஆகிறான்

இந்த உபாஸனத்தால் பெற முடியாதது ஒன்றும் இல்லை. சகல சம்பத்துகளையும் அடைந்து நிஷ்காம த்யானத்தால் வேதாந்த வாக்ய ஞானமும் அதனால் பரமானந்த லாபமும் அடைவான்.

(தொடரும்...)



# ஜகத்குரு ஸ்ரீ ஸச்சிதாநந்த சிவாபிநவ நரஸிம்ஹ பாரதீ மஹாஸ்வாமிகளின் திவ்ய சரித்திரம்

**1.ஸ்ரீ குருநாதர் மஹிமை**



ஸ்ரீமத் ஆசார்யார் ஏதேனும் ராஜாவின் ஸம்ஸ்தானத்திற்குப் போவதாயிருந்தால் அந்த அரசர் கோட்டை வாசலுக்கு வந்து எதிர் கொண்டழைத்து ஸ்ரீ ஸ்வாமிகள் ஏறியிருந்த பல்லக்கை தூக்குகிற பாவனையாகப் பிடித்துக் கொண்டு கொஞ்ச தூரம் வருகிற ஸம்பிரதாயம் உண்டு. இவர் மத்ய மாகாணம் ராஜதானியான நாகப்பூருக்கு விஜயம் செய்த ஸமயம் அப்பொழுதிருந்த அரசர் இந்த ஸம்பிரதாயப்படி கோட்டை வாசலுக்கு வராததினால், ராஜதானிக்குள் போகாமல் வெளியிலேயே காமடீலஷ்கர் என்றவிடத்தில் தங்கிக்கொண்டு ஸ்ரீமடத்தின் செலவிலேயே ஸகல கார்யங்களையும் ஸ்ரீஸ்வாமிகளவர்கள் நடத்திக் கொண்டார்கள். “சரீர அஸௌகரியத்தினால் மஹாராஜா கோட்டை வாசலுக்கு வர முடியவில்லை" என்று ஸமாதானம் சொல்லியனுப்பினபோது "அப்படியே இருக்கட்டும்" என்று ஸ்ரீமத் ஆசார்யார் சொன்னதாகவும் அந்த க்ஷணம் முதல் மஹாராஜாவுக்கு எதிர்பாராமல் சரீரத்தில் பலவித தொந்திரவுகள் ஏற்பட்டு வேறு பல விதங்களிலும் சிரமம் ஏற்பட்டதாகவும் தெரிகிறது. இவையெல்லாம் ஸ்ரீமத் ஆசார்யாருக்கு செய்த அபசாரத்தினால் தான் ஏற்பட்டவையென்று அம் மஹாராஜாவுக்கு தென்பட்டு மிகவும் பச்சாதாபத்துடன் அவர்கள் இணங்கி தங்கியிருந்த இடத்திற்கு கால்நடையாகவே வந்து சரணமடைந்தார். ஆசார்யாரும் மஹாராஜாவின் பிரார்த்தனைக்கு முன்னுள்ள ஸம்பிரதாயப்படி நாகப்பூருக்குள் விஜயம் செய்து அந்த ராஜனுக்கு அனுக்ரஹம் செய்தார்கள்.

இவர்கள் தக்ஷிண தேசத்தில் காளஹஸ்தி, திருப்பதி, காஞ்சீ, சிதம்பரம், கும்பகோணம், ஸ்ரீரங்கம் வழியாக 1838 விளம்பி வருஷத்தில் ராமேசுவர க்ஷேத்திரத்திற்கு விஜயம் செய்தார்கள். அங்கே ஆலயத்தின் வடபக்கத்தில் கோடி தீர்த்தம் என்று ஒரு தீர்த்தமிருக்கிறது. யாத்திரையாக வருகிறவர்கள் பல தீர்த்தங்களில் ஸ்நாநம் செய்துவிட்டு இந்த கோடி தீர்த்தத்திலும் ஸ்நாநம் செய்து அந்த தீர்த்தத்தில் கொஞ்சம் தங்கள் ஊருக்குக் கொண்டு போய் கோடி தீர்த்த ஸமாராதனையென்று செய்வதுண்டு. இந்த தீர்த்தத்திற்கு ராமேசுவரத்திலுள்ள ஆர்யபிராஹ்மணர் என்ற ஒரு வகுப்பார் கதவுபோட்டு பூட்டி வைத்துக்கொண்டு ஒரு குடம் தீர்த்தத்திற்கு காலணா வீதம் வாங்கிக்கொண்டு அவர்களே ஜலத்தை எடுத்து யாத்திரிகர்களுக்கு ஸ்நாநம் செய்விப்பார்கள். ஸ்ரீமத் ஆசார்யார் விஜயம் செய்த சமயத்திலும் அப்படியே தாங்கள்தான் ஜலத்தை எடுத்துக் கொடுப்போம் என்று பிடிவாதம்



செய்தார்கள். உடனே ஸ்ரீஸ்வாமிகள் ஆலயத்திற்கு தென்புறமுள்ள ஸர்வதீர்த்தம் என்ற இடத்திற்கு வந்து "கோடி என்ற எண்ணிக்கை கணக்கில் அடங்கிவிட்டது. கணக்கில் அடங்காத இந்த ஸர்வதீர்த்தமே மேலானது. இதில் ஸ்நாநம் செய்தால் எல்லா தீர்த்த ஸ்நாந பலன்களும் ஏற்படும். அப்படியே செய்யுங்கள்" என்று ஆக்ஞாபித்தார்கள். அதுமுதல் எல்லா ஜாதி ஜனங்களும் அந்த கோடி தீர்த்தத்திற்கு போவதை நிறுத்திவிட்டார்கள். அந்த ஆர்யபிராஹ்மணர் குருசாபத்திற்கு உட்பட்டவர் என்று அவர்களிடம் புரோஹித கார்யத்தையும் அநேகர் நிறுத்தி விட்டார்கள். வேறு பலவிதமாகவும் அந்த வகுப்பினர் கஷ்டங்களை அனுபவிக்க நேரிட்டது. கோடி தீர்த்தமும் உபயோகமற்ற நிலமையை அடைந்துவிட்டது. இப்படியே 35 வருஷங்களுக்கு மேல் அனுஷ்டானம் நடந்துவந்தது. மறுதடவை ஸ்ரீமத் ஆசார்யார் தக்ஷிணயாத்திரையாகப் புறப்பட்டு 1873 ஸ்ரீமுக வருஷத்தில் மதுரைக்கு விஜயம் செய்த ஸமயம் இந்த ஆர்யபிராஹ்மணர்கள் அங்கே வந்து, தாங்கள் முன் செய்த அபசாரத்தை மன்னித்து தங்களை அனுக்ரஹித்து காப்பாற்ற வேண்டுமென்று பிரார்த்தித்துக் கேட்டுக் கொண்டார்கள். அதற்கிசைந்து ஸ்ரீமத் ஆசார்யார் ராமேசுவரம் சென்று ஸகல கார்யங்களையும் முடித்துக்கொண்டு ஸர்வதீர்த்தத்தில் ஸ்நாநம் செய்து அந்த தீர்த்தத்திலிருந்து தன் கமண்டலுவில் தீர்த்தம் எடுத்துக் கொண்டுவந்து கோடி தீர்த்தத்தில் சேர்த்து, பிறகு அக்கோடி தீர்த்தத்திலிருந்து தன் பரிஜனங்களைக் கொண்டு தீர்த்தம் எடுக்கச் சொல்லி தானும் ஸ்நாநம் செய்து சிஷ்யஜனங்களையும் ஸ்நாநம் செய்யும்படி ஆக்ஞாபித்தார்கள். அதுமுதல் அந்த கோடி தீர்த்தத்திற்கு முன்னிலும் அதிகமான மஹிமை ஏற்பட்டுவிட்டது. ஸ்ரீமத் ஆசார்யார் 1872 ஆங்கிரஸ வருஷத்திலேயே மதுரைக்கு வந்துவிட்டார்கள். வழக்கம்போல் ஸ்ரீ மீனாக்ஷி ஸுந்தரேசுவரர் தேவாலயம் கல்யாண மண்டபத்தில் ஜாகை வைத்துக்கொண்டு ஒரு நாள் முன் ஆசரணையை அனுஸரித்து கர்ப்பகிரஹம் சென்று ஸ்ரீ மீனாக்ஷியம்மனுக்கு நேரிலேயே பூஜை செய்ய யத்தனிக்கையில் சில அர்ச்சகர்கள் ஆக்ஷேபித்தனர். உடனே ஸ்ரீமத் ஆசார்யார் இரண்டு தேங்காய்களை கொண்டுவரச் சொல்லி அவைகளில் அம்மனுடைய கலையை ஆகர்ஷணம் செய்து கொண்டு இருப்பிடத்திற்கு வந்து, அத்தேங்காய்களை வைத்து நியமத்துடன் பூஜை நைவேத்யம் செய்து எல்லா ஜனங்களுக்கும் மடத்திலேயே பிரஸாதம் கொடுத்து அனுக்ரஹித்தார்கள். அதுமுதல் ஆலயத்தில் அர்ச்சகர் மூலமாக நிவேதனம் செய்யவாவது பிரஸாதம் பெற்றுக் கொள்ளவாவது வேண்டாம் என்று ஸ்ரீமத் ஆசார்யார் செய்த ஆக்ஞையை அனுஸரித்து எல்லா ஜனங்களும் ஆலயத்திற்கு வெளியிலுள்ள பலிபீடத்திற்கு ஸமீபத்தில் நின்றுகொண்டு தாங்களே தேங்காய் உடைத்து நைவேத்யம் செய்து கற்பூர ஆரத்தி காட்டி தூரத்திலிருந்தே நமஸ்கரித்துவர ஆரம்பித்தார்கள். இவ்வனுஷ்டானத்தை அமுலுக்குக் கொண்டுவரும் விஷயத்தில், அப்பொழுது மதுரையில் பிரஸித்த வக்கீலாயிருந்து பின்னால் சென்னை ஹைக்கோர்ட்டு ஜட்ஜாயிருந்த டாக்டர் ஸர். S. ஸுப்ரஹ்மண்ய அய்யரே முதன்மையாயிருந்தார். "பெரியோர்கள் சபிக்கமாட்டார்கள், அவர்களுக்கு செய்த அபசாரமே சாபமாக மாறிவிடும்". (தொடரும்….)



# श्रीमन्नारायणीयम्
## ஶ்ரீமந்நாராயணீயம்
## ध्यानम्
த்⁴யானம்

क्षीरोदन्वत्प्रदेशे शुचिमणिविलसत्सैकतेर्मौक्तिकानां
मालाक्लृप्तासनस्थः स्फटिकमणिनिभैर्मौक्तिकैर्मण्डिताङ्गः ।
शुभ्रैरभ्रैरदभ्रैरुपरिविरचितैर्मुक्तपीयूष वर्षै-
रानन्दी नः पुनीयादरिनलिनगदाशङ्खपाणिर्मुकुन्दः ॥

க்ஷீரோத³ன்வத்ப்ரதே³ஶே ஶுசிமணிவிலஸத்ஸைகதேர்மௌக்திகானாம்'
மாலாக்ல்ரு'ப்தாஸனஸ்த²: ஸ்ப²டிகமணிநிபை⁴ர்மௌக்திகைர்மண்டி³தாங்க³: |
ஶுப்⁴ரைரப்⁴ரைரத³ப்⁴ரைருபரிவிரசிதைர்முக்தபீயூஷ வர்ஷை-
ரானந்தீ³ ந: புனீயாத³ரிநலினக³தா³ஶங்க²பாணிர்முகுந்த³: ||



தூய ஒளியுள்ள ரத்தினங்கள்போன்று அழகுற்ற மணல்பரப்புள்ள திருப்பாற்கடலில் முத்துமாலைகளாலான ஆஸனத்தில் அமர்ந்தவரும், ஸ்படிகமணி போன்ற முத்துக்களாலான அணிகளால் அலங்கரிக்கப் பெற்ற திருமேனி உள்ளவரும், தனது திவ்ய ஆஸனத்தின் மேற்கட்டியாக அமைந்துள்ள அமுதமழை சொரிந்து வெளுத்துள்ள தூய மேகங்களால் ஆனந்திப்பவரும், சக்கிரம், தாமரைப்பூ, கதை, இவைகளைக் கையில் கொண்டவருமான முகுந்தன் நம்மைத் தூயவராக ஆக்குவாராக.

भूः पादौ यस्य नाभिर्वियदसुरनिलश्चन्द्रसूर्यौ च नेत्रे
कर्णावाशाः शिरो द्यौर्मुखमपि दहनो यस्य वास्तेयमब्धिः ।
अन्तःस्थं यस्य विश्वं सुरनरखगगोभोगिगन्धर्वदैत्यै-
श्चित्रं रंरम्यते तं त्रिभुवनवपुषं विष्णुमीशं नमामि ॥

பூ⁴: பாதௌ³ யஸ்ய நாபி⁴ர்வியத³ஸுரனிலஶ்சந்த்³ரஸூர்யௌ ச நேத்ரே
கர்ணாவாஶா: ஶிரோ த்³யௌர்முக²மபி த³ஹனோ யஸ்ய வாஸ்தேயமப்³தி⁴: |
அந்த:ஸ்த²ம்' யஸ்ய விஶ்வம்' ஸுரநரக²க³கோ³போ⁴கி³க³ந்த⁴ர்வதை³த்யை-
ஶ்சித்ரம்' ரம்'ரம்யதே தம்' த்ரிபு⁴வனவபுஷம்' விஷ்ணுமீஶம்' நமாமி ||

எவருக்கு பூமி இருகால்களோ, ஆகாசம் தொப்புள் பகுதியோ, வாயு பிராணவாயுவோ, சந்திரனும் ஸூர்யனும் இரு கண்களோ, திக்குகள் காதுகளோ, வானுலகம் தலையோ, அக்னி வாயோ, கடல் சிறுநீரகமோ (சிறு



நீரோ) எவருடைய உடலினுள் அமைந்த இவ்வுலகம் தேவர்கள், மனிதர்கள், ஆகாயத்தில் செல்பவை, கால்நடைகள், பாம்பு முதலிய ஊர்வன, கந்தர்வர்கள், அஸுரர்கள் இவர்களால் விசித்திரமாகப் பலவாறாகத் தோன்றி இன்பமாக அனுபவிக்கப் பெறுகிறதோ, மூவுலகையும் வடிவாகக்கொண்ட அந்த எங்கும் நிரம்பிய ஆண்டவனை வணங்குகிறேன். பகவான் வாஸுதேவனுக்கு வணக்கம்.

शान्ताकारं भुजगशयनं पद्मनाभं सुरेशं
विश्वाधारं गगनसदृशं मेघवर्णं शुभाङ्गम् ।
लक्ष्मीकान्तं कमलनयनं योगिभिर्ध्यानगम्यं
वन्दे विष्णुं भवभयहरं सर्वलोकैकनाथम् ॥

ஶாந்தாகாரம்' பு⁴ஜக³ஶயனம்' பத்³மநாப⁴ம்' ஸுரேஶம்'
விஶ்வாதா⁴ரம்' க³க³னஸத்³ரு'ஶம்' மேக⁴வர்ணம்' ஶுபா⁴ங்க³ம் |
லக்ஷ்மீகாந்தம்' கமலநயனம்' யோகி³பி⁴ர்த்⁴யானக³ம்யம்'
வந்தே³ விஷ்ணும்' ப⁴வப⁴யஹரம்' ஸர்வலோகைகநாத²ம் ||

சாந்த வடிவினரும் பாம்பைப் பள்ளியணையாகக் கொண்டவரும் தாமரையை ஒத்த கொப்பூழையுடையவரும் தேவர்களின் ஈசனும், உலகின் ஆதாரமும், ஆகாயம் போன்றவரும், மேக நிறம் கொண்டவரும், சுப லக்ஷணங்கள் அமைந்த அங்கங்கள் உள்ளவரும், லக்ஷ்மீ தேவிக்கு இனியவரும், தாமரைக் கண்ணரும், யோகிகளின் ஹ்ருதயத்தில் அவர்களது தியானத்தால் உணரத்தக்கவரும், ஸம்ஸார பயத்தை நீக்குபவரும், எல்லா உலகிற்கும் தனி நாயகராக விளங்குபவருமான அந்த விஷ்ணுவை வணங்குகிறேன்.

मेघश्यामं पीतकौशेयवासं श्रीवत्साङ्कं कौस्तुभोद्भासिताङ्गम् ।
पुण्योपेतं पुंडरीकायताक्षं विष्णुं वन्दे सर्वलोकैकनाथम् ॥

மேக⁴ஶ்யாமம்' பீதகௌஶேயவாஸம்' ஶ்ரீவத்ஸாங்கம்'
கௌஸ்துபோ⁴த்³பா⁴ஸிதாங்க³ம் |
புண்யோபேதம்' புண்ட³ரீகாயதாக்ஷம்' விஷ்ணும்' வந்தே³ ஸர்வலோகைகநாத²ம் ||

மேகம் போன்று கருநீல நிறமுள்ளவரும் செம்மஞ்சள் நிறமுள்ள பட்டாடை உடுத்தியவரும் ஸ்ரீவத்ஸம் எனும் மறுவைச் சிறப்படையாளமாகக் கொண்டவரும் கௌஸ்துபம் எனும் மணியால் ஒளிபெற்ற மார்பகமுள்ளவரும் புண்ணியத்தால் அருகில் நெருங்கப் பெறுபவரும் தாமரை போன்று அலர்ந்து விரிந்த கண்களுள்ளவரும் எல்லா உலகங்களுக்கும் ஒப்பற்ற தலைவருமான விஷ்ணுவை வணங்குகிறேன்.
(தொடரும்...)

ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ மஹாஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள், ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ ஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ விதுசேகர பாரதீ மஹாஸ்வாமிகள் அவர்களின் பொற்பாதங்களில் சமர்ப்பிக்கிறோம்